

# கண்ணாடிப் பூக்கள்

(கவிதைத்தொகுப்பு)

பிரபாகரன் வேதிகா

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW UNNAYAN PUBLICATION PVT. LTD
03 DEC 2015
'S OFFICE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணாடிப் பூக்கள்

(கவிதைத் தொகுப்பு)

பிரபாகரன் வேதிகா

வெளியீடு:
பழைய மாணவர் சங்கம்
வவு/கனகராயன்குளம் மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | கண்ணாடிப் பூக்கள் |
| நூலின் வகை | : | புதுக்கவிதை |
| நூலாசிரியர் | : | பிரபாகரன் வேதிகா |
| வெளியீடு | : | பழைய மாணவர் சங்கம்<br>வவு/கனகராயன்குளம் ம.வி |
| பக்கங்கள் | : | 64 |
| பிரதிகள் | : | 500 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப்படம் | : | எஸ்.விஜய் |
| முதற் பதிப்பு | : | மே 2015 |
| அச்சகம் | : | விஜய் அச்சுப்பதிப்பகம்<br>024 222 5799 / 077 900 9491 |
| ISBN | : | 978-955-42298-0-8 |
| விலை | : | 150/- |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதிகாவின்...

# கண்ணாடிப் பூக்கள்

பெற்றோரின் ஆசிகளுடன்...



கட்டுரையாக்கம், சிறுகதை எழுதுதல், விவாதம், பேச்சு
எனப்பல பரிமாணங்களில் பரிணமிக்கும்
எமது மகளின் கவிப்பயணமும் வெற்றிபெற
வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

உள்ளத்தின் உள்ளே உந்தும் உணர்வுகளை உருவமாக்கி, உருவகமாக்கி, உவமை சேர்த்து உலகிற்கு கொண்டு வரும் உத்தியே கவிதை என்று சொல்வதில் அர்த்தமிருக்கின்றது. சங்ககாலம் தொட்டு எங்கள் காலம் வரைக்கும் இலக்கிய உலகில் கவிதை காத்திரமான ஒரு இடத்தினை பிடித்து வருகின்றது என்பது கண்கூடு. அதன் படிமங்களிலும், வடிவங்களிலும் மாற்றங்கள் நிகழ்கின்றனவேயொழிய கவித்துவத்துடிப்பு இன்னும் கனதியாகவே ஒலிக்கின்றது எனலாம்.

மரபுக்கவிதை, புதுக்கவிதை, வசனக்கவிதை, கைக்கூ என்று மாற்றம் கண்ட பல்வேறுபட்ட கவிதை வடிவங்களுக்குள் வசப்படுகின்ற இன்றைய இளம் உள்ளங்கள் பல்வேறுபட்ட கவிதைகளை வார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். வரம்பு வரன்முறைகள் தெரியாமல் சொற்களை கோர்த்துக் கொண்டு சிலரும், வேறுபல கவிதைகளை பார்த்து படி எடுத்துக் கொண்டு சிலரும், வசனங்களை சேர்த்தும், முறித்தும் இதுதான் கவிதையென்று நோக்கிக்கொண்டு சிலரும் வளர்ந்துவருகின்றார்கள். இவைகள் குற்றம் அல்ல ஆனால் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய தவறுகளாக இருக்கின்றன.

"கவிஞர்" என்கின்ற அடைமொழி அவ்வளவு இலகுவாக அடையக்கூடிய ஒன்றல்ல என்பதனை கவி இலக்கியத்துள் பிரவேசிக்கும் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். ஆனால் அது அடைய முடியாத இலக்கும் அல்ல. எழுதிக் கொண்டே இருப்போம் வழுக்கள் வரும்; வழக்கம் மாறும்; வடிவம் புரியும்; ஓசை படியும்; கற்பனை பிறக்கும்; கவிதை சிறக்கும்; அப்போது மற்றவர்கள் " கவிஞர்" என்று அழைப்பார்கள் இது வரை காத்திருப்போம்.

இந்தக் காத்திருப்புக்கு தயாராகவும், முயற்சியுடனும் பயிற்சியுடனும் களம் இறங்கியிருக்கும் பிரபாகரன் வேதிகா அவர்களின் கவிதைப் படைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரவேசம் இந்தப் பிரசவத்தினால் அரங்கேறுகின்றது. இன்றைய நவீன தொழில் நுட்ப சமூக மேடைகளிலே தலை கால் புரியாமல் நடனமாடிக் கொண்டிருக்கும் நம் இளைய சந்ததிகளின் நெரியல்களுக்கு மத்தியில் மொழி, இலக்கியம் சமூகப் பிரக்ஞை போன்றவற்றில் பற்றுக் கொண்ட தன் உணர்வுகளை கவிதையில் பயணிக்க விட்டிருக்கும் வேதிகாவின் முயற்சி பாராட்டக்கூடியதும், வளர்த்துவிடக்கூடியதும் ஆகும்.

இன்னுமொன்றும் இங்கே குறித்தாக வேண்டும். இன்றைய இளம் கவிதைகளை காதலுடன் தொடங்கினால் பரவாயில்லை காதல் கவிதைகளுடன் தொடங்குகின்றார்கள். அதற்காக "காதல்" என்பது கவிதைக்கு உரிய பாடுபொருள் அல்ல என்ற அர்த்தத்தில் சொல்வதாக நினைக்க வேண்டாம். காதலிப்போர் தான் கவிதை எழுதுகின்றார்கள் என்று கவிதையின் அர்த்தத்தை மாற்றிவிடக்கூடாது என்ற ஆதங்கத்தில் கூறுகின்றேன். இந்தக் கருத்து முரண்பாடு அதிகம் ஏற்படாமல் மிகக்கவனமாக மாணவி வேதிகா அவர்கள் தன் கன்னிப்படைப்பை படைத்திருக்கின்றார்கள்.

தன் உணர்வுகளையும் தன் சார்ந்த சமூக உணர்வுகளையும் சாடலாகவும் தேடலாகவும், பல்வேறுபட்ட தலைப்புகளில் சிறுசிறு கவிதைகளாக தொகுத்துள்ளார். பந்தி பந்தியாக எழுதி கவிதையால் பந்தி வைக்கவேண்டும் என்றல்ல மனதிலே பதியும் படியாக ஒரு நாலு வரியிருந்தாலும் அது நல்ல கவிதைதான். அந்த வகையில் உருவத்தை பருவம் அறிந்து கையாண்டு உள்ளார் வேதிகா. மாணவப் பருவத்தில் இருக்கின்ற துடிப்பு பல கவிதைகளில் துளிர் விடுகின்றது. கவிதை இலக்கியத்திலும் மாணவியாக இருக்கின்றார் என்பதனை பிரதிபலிப்பது போல சில சில ஓசை மயக்கங்கள், ஒத்துப்போகாத உவமைகள் இருந்தாலும் பட்டை தீட்டத் தீட்ட பிரகாசிக்க கூடிய கவிதைப் பரீட்சயத்தை அவர் படைப்பில் காணக்கூடியதாக உள்ளது.

எடுத்துக்காட்டாக,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இல்லாத தொல்லைகள்**
**இதயத்தில் தொடர்ந்தாலும்**
**பொல்லாத ஆசைகள்**
**பொங்கி வழிகின்றன**

என்று ஆசை பற்றி அறிவுறுத்தும் போதும்

**கல்லடிபட்ட மயிலாய்**
**கால்கள் இழந்து தவிக்கின்றேன் நான்**
**பல வர்ணச் சாயமிட்டு**
**பறக்கவைக்கப் பார்க்கிறாய் நீ**

என்று நான் - நீ என்ற தலைப்போடு நலிவையும் நம்பிக்கையையும் உணர்த்தும் போதும்,

**அன்னையின் கருவறையில்**
**ஐயிரண்டு மாதங்கள்**
**இன்னொருமுறை வாழ்ந்திட**
**வல்லமை தாராயோ!**

என்று பல்வேறு வல்லமைகளை பாரதி போல் சொல் நெறி நின்று சொல்கின்ற போதும்,

**கொடை கொடுக்க விரும்பியவன்**
**கர்ணன் கதவை தட்டியது போல்**

என்று உவமை பேசும் போதும்,

**விரைந்திடுவாய் பெண்ணே! - உனக்கான**
**விடுதலைப் பாதை நோக்கி**
**விழித்துப்பார் உன்னைச்சுற்றி**
**விழிவலைகள் விரிக்கப்பட்டிருக்கும்**

என்று பெண்ணுக்கு திருப்பள்ளி எழுச்சி பாடுகின்ற போதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இதை யார் வாங்குவார்**
**கல்யாண சந்தையில்**
**கசக்கி எறியப்பட்ட மலர் நான்**

**இதை யார் வாங்குவார்**
**தமிழ் அகராதியில்**
**ஒதுக்கி வைக்கப்பட்ட ஃ நான்**

என்று வலிகளை வரிகளால் வருடுகின்ற போதும்,

வேதிகா நல்ல நயம் மிக்க கவிதைகளின் படைப்புக்குள் காலடி எடுத்து வைப்பதை என்னால் உணர முடிகின்றது. காலத்தின் தேவைக்கு உட்பட்ட நல்ல நல்ல கருவினை எடுத்து, கற்பனைச் சிறகு பூட்டி யாதார்த்தத்தை நழுவவிடாது, உற்சாகத்தை ஊக்குவிப்பதற்காய் உகந்த ஓசை சந்தம் கூட்டி ஆக்கப்படும் கவிதைகள் மனதை ஆழும். இந்த ஆழும் அனுபவத்தை வேதிகா மட்டுமன்றி வேறு யாரெல்லாம் கவிதை இலக்கியத்துள் காலடி எடுத்து வைத்துள்ளார்களோ அவர்கள் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தவறை ஏற்கின்ற பக்குவமும் தவறை எடுத்துச் சொல்லும் தைரியமும் இருக்கின்ற படைப்பாளி படைப்புலகில் பேசப்படுவார். பிழைகளை பற்றி பிரஸ்தாபிக்க நான் பிரியப்பட்டதில்லை ஏனென்றால் பிரசவம் என்பது எவ்வளவு வலி நிறைந்தது என்பது எனக்குத் தெரியும். பிழைகளோடு தான் அனைத்துமே பிறக்கின்றன. அவைகள் அனுபவங்கள் மூலமும் ஆன்றோர் சான்றோர்களின் அக்கறைகளின் மூலமும் திருத்தப்பட வேண்டியவை குறைபாடுகளையும் பிரசவங்களை கலைக்குடும்பம் கண்டுவிடக்கூடாது என்ற கரிசனை மிகுதியால் சில கருத்துக்களை பகிர்ந்து கொண்டேன்.

முகம் அறியாத பிரபாகரன் வேதிகா அவர்களின் கவிதைத் தொகுப்பு நூலுக்கு அணிந்துரை ஒன்று வழங்குமாறு அவருடைய ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீபன் அவர்கள் என்னை அணுகினார்கள். இதில் தவறு ஒன்றும் இல்லை. அணிந்துரை வேதிகாவின் படைப்புக்கே தவிர வேதிகாவிற்கு அல்ல. நான் அவருக்கு கூறியது போல அணிந்துரையிலும் கூறியுள்ளது ஆத்மார்த்தமானதாகும்.

புதிய படைப்பாளி வேதிகா பாதியில் உங்கள் பயணத்தை நிறுத்திக் கொள்ளாது பக்குவம் நிறைந்த பல்வேறுபட்ட கவிதை நூல்களை படைக்க வேண்டும். புதிய புதிய சிந்தனைகளால் மாறிப் போன மனம் ஏற்காத மரபுகளை உடைக்க வேண்டும். மரபுவழிக் கவிதைகளையும் கற்கவேண்டும் மண்மணக்க ஊருக்கும் உங்களுக்கும் பெருமை சேர்க்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**குரும்பையூர் ஐங்கரன்**
இல:29. கோவில் வீதி,
குருமண்காடு. வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

எமது பாடசாலையில் க.பொ.த (உ/த) கலைப்பிரிவில் (2015) கல்விபயிலும் செல்வி பிரபாகரன் வேதிகா அவர்கள் தனது கன்னி முயற்சியாக "கண்ணாடிப்பூக்கள்" என்ற கவிதைத் தொகுப்பை நூலாக வெளியிடுகின்றார். மாணவியின் கவிதைத் தொகுப்பிற்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இம்மாணவி இலக்கியத்துறையில் மிகவும் ஆர்வமுள்ளவர். குறிப்பாக கவிதைத்துறையில் சிறுபராயம் தொடக்கம் சிறந்து விளங்குகின்றார். பத்திரிகைகள், சஞ்சிகைகள், வானொலிகளில் இவரது கவிதைகள் வலம் வருவது சிறப்பிற்குரியது.

எமது பாடசாலை வரலாற்றில் முதன்முதல் எழுத்துருவில் வெளிவரும் நூலாக இம்மாணவியின் நூல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இம்மாணவியின் முயற்சியால் எமது பாடசாலை பெருமையடைகின்றது.

இம்மாணவி கல்வியில் மென்மேலும் சிறந்து விளங்கி ஆக்க இலக்கியத்துறையில் மிளிர்வார் என்ற நம்பிக்கை எனக்குண்டு. வேதிகாவின் முயற்சியினைப் பாராட்டுவதோடு, அவர் எதிர்காலத்தில் சிறந்த ஆகக இலக்கியகர்த்தாவாக தடம்பதிக்க இறைவனுடைய ஆசிகளை வேண்டி வாழ்த்தி எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்கின்றேன்.

**திரு.ச.நித்தியானந்தம்**
அதிபர்,
வ/கனகராயன்குளம் ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துக்கவி
## நேரிசை வெண்பா

கற்றபொருள் அறிவும் தான் முயன்று
பெற்ற நல் அனுபவமுங் சேரப் பெற்றோரும்
உற்றாரும் உவகையுறும் வண்ணம் அழகாய் மலரப்
பெற்ற கவியே இந்நூல்

கலையில் ஆர்வங்கொண்ட வேதிகா
கலைத்துறையில் நன்றாய்கற்று - கலையில்
நிலையாய் உயர்ந்து விளங்கிட என் உள்ளத்தில்
நிலைத்தவனை நினைந்து வாழ்த்துகிறேன்

சைவப்புலவர்
**பா.திலகானந்தன்**
ஒட்டுசுட்டான்
(சைவசமய ஜோதி, சைவக்குரலோன், சிந்தனையாளர்,
சிவ அன்பன், புவீஸ்வரப் புலவர், சைவப்புலவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

என் கண்களை கண்ணீர்
ஆட்கொள்ளும் போதும்
சந்தோஷம் என் மனதில்
சங்கமிக்கும் போதும்
சாரமாய் பேனாவுக்குள் வந்து
தாள்களில் கோலமிட்டு
என் உணர்வுச் சினுங்கல்களை
அடுத்த நொடிக்கு
எடுத்துச் செல்லும்
என் உடலின்
அணுக்கள் தான்
என் கவிதைகள்

என் உணர்வுகளின்
உரசல்களை
நீங்களும் இரசித்துப்
பாருங்களேன்
என் திருப்திக்காய்...!

இல: 31,
பெரியகுளம், கனகராயன்குளம்,
வவுனியா.
தொ.பே: 077 5512624

நன்றியுடன்...
**வேதிகா பிரபாகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | | | |
|---|---|---|---|
| 1 | என்னுரை | 25 | ஒளி கொடுப்பீரோ.. |
| 2 | விலைக்குறைப்பு | 26 | கவிதை, முதியோர் இல்லம் |
| 3 | சுதந்திரம் | 27 | மன்னிப்பு |
| 4 | திருக்குறள் | 28 | இசைஞானி |
| 5 | மறக்கமுடியாதவை | 29 | ஊனமுற்ற செல்வம் |
| 6 | இனியது | 30 | எதைத் தருவேன் உனக்கு |
| 7 | மனிதாபிமானம் | 31 | திருப்பள்ளி எழுச்சி |
| 8 | இன்றைய நிஜம் | 32 | வறுமையின் வலிமை |
| 9 | உதிர்ந்த இறகுகளாக... | 33 | ஊற்றெடுக்கும் கவிதைகள் |
| 10 | ஆசைகள் | 34 | காத்திருக்கிறேன் |
| 11 | கண்ணீர், பெரியது | 35 | இராத்திரிகள் |
| 12 | காதல் | 36 | மலர்களின் ஏக்கம் |
| 13 | மழை தாராயோ | 37 | யார் வாங்குவார்? |
| 14 | சுதந்திரக்காற்று | 38 | வாழ்க!, சாதியை விரட்டுவோம் |
| 15 | கண்ணாடிப்பூக்கள், நின்று விட்டேன் | 39 | நட்பு |
| 16 | பண்பாடு | 41 | நவீனமயமாக்கல் |
| 17 | தமிழ் மகள், கொடியது | 42 | கலையும் இலக்கியமும் |
| 18 | நான் - நீ | 43 | காரணம் |
| 19 | மாறாத அன்பு | 44 | பெண்ணே! |
| 20 | அரியது | 45 | நெஞ்சை நெருடும் நினைவுகள் |
| 21 | ஒரு சோடிப் பெற்றோரின் சோகக்கதை | 48 | வெறுமை |
| 22 | வல்லமை தாராயோ.....? | 50 | புதுயுகம் படைப்போம் |
| 23 | வருவாயா... | 51 | பாலாபிசேகம் |
| 24 | மலருது மொட்டு, புதியது | 52 | இவர்களுக்கு நன்றிகள் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னூர்

என்றும் மிடுக்குடன்
மிளிரும் என்னூர்
ஒளிரும் புகழ் கொண்ட
எழில் சூழ் சேமமடு

தூங்கும் பனித்துளிகளை
கிள்ளியெழுப்ப வெட்கப்படுவான்
கிழக்கு வானின் சூரியன்
பொங்கும் இன்பமே எங்கும்

வருடிச் செல்லும் தென்றலும்
மண்வாசனைதரும் மழைத்துளியும்
விண்முட்டும் மரங்களும்
மனங்களை நிறைக்குமே என்னூரில்

எண்பது வயதிலும் எடுப்பாய் நடக்கும்
எழில்மிகு மனிதர்களைக் கொண்ட
எட்டுத் திசையெங்கும் புகழுடன் மிளிரும்
என்னூரின் எழில் வேறுண்டோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலை குறைப்பு

நீதியின் விலை
அதிகரித்து விட்டதால்
அகதிகளின் தொகை
அதிகரித்து விட்டது

அன்பின் விலை
அதிகரித்து விட்டதால்
அநாதைகளின்று
அதிகமாகி விட்டனர்

நியாயத்தின் விலை
அதிகரித்து விட்டதால்
ஏழைகளால் அதை
வாங்கமுடியவில்லை

அன்பிற்கும் நீதிக்கும்
விலைகுறைப்பு வருமா
ஏழைகளும் வாங்கி
ஏற்றமுடன் வாழ்வதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம்

எமது சுதந்திரம்
விலங்கு பூட்டப்பட்ட
ஏர்மாடுகளாய் எமையாக்கி
மர்மமாய் மறைந்து போயிற்று...

துள்ளித்திரிந்த நண்டு
நாரையின் காலில்
அகப்பட்டது போல...

மணல் வீடு கட்டி
மகிழ்வாய் இருக்கையில்
அலை அள்ளிச் சென்றது போல...

இப்போது..
எம் சுதந்திரம்
அதிகாரத் திமிர்மிக்க
அதிகாரிகளின் கைப்பொம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள்

திருக்குறள் என்பது
மனிதனால் உருவாக்கப்பட்டதல்ல
மகானால் உருவாக்கப்பட்டது

திருக்குறள் என்பது
சீமெந்தில் கட்டிய
சாதாரண கட்டிடமல்ல
அறிவால் கட்டிப்பட்ட
அறிவுக் கட்டிடம்

திருக்குறள் என்பது
புதுக் கட்டிடமல்ல
புயல் காற்றிக்கும்
ஈடுகொடுக்கக்கூடிய
ஈடு இணையில்லா
தங்கக் கட்டிடம்
தர்ம மாளிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியாதவை

உதவியை எதிர்பார்த்திருந்த எமக்கு
ஆறுதல் தந்தவை எறிகணைகளும்
கொத்துக் குண்டுகளும் தான்
ஏங்கி ஏங்கி
உதவியை எதிர்பார்த்து
வாழாமல் சொர்க்கத்தைக்
காட்டுகிறேன் வாவென்று
கட்டி அணைத்தவையும் அவையே

வயது எல்லை பார்க்காது
ஏழை பணக்காரன் பார்க்காது
எட்டுத்திக்கும் உடல்கள்
எரிந்து கிடந்தனவே!
பாவம் மனிதன் என்றெண்ணி
குழி தோண்டும் வேலையிலிருந்தும்
விறகு வெட்டி எரிக்கும் வேலையிலிருந்தும்
மனிதனுக்கு விடுதலை கொடுத்தவை
எறிகணைகளும் கொத்துக்குண்டுகளுமே

உதவவரும் உதவவரும்
உலகநாடுகள் உதவவரும்
வழிமேல் விழிவைத்து
காத்திருந்த எமக்கு
கண்ணிலிருந்து கால்வரைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயங்கள் பலதந்து
கஷ்டங்கள் தந்தவையும் அவையே...

எமது விடியல்களுக்காய்
நாம் பட்ட பாடுகள்
விழுந்து துடிதுடித்து
உறவுகளை இழந்து
உயிருக்காக போராடிய
அந்தத் தருணங்கள்
வாழ்வில் என்றுமே
மறக்க முடியாதவை!

## இனியது

தேன் சிந்தும் தாய்மொழியால்
மென்மேலும் நான் வளர
அன்பு ஆசியோடு நல்லறிவுரை
அள்ளியே தந்திடும் தந்தையின்
ஆலோசனைகளை மகிழ்ந்தே
கேட்கும் சுவையும்
அணையில்லாது அன்பு அலைவிட்டு
எனையாளாக்கும் அன்பு உறவுகளின்
அன்பு பாராட்டுதல்கள் இனியவையன்றோ
இதைவிட இனியது இவ்வுலகில் ஏது?

பி.வேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமானம்

மனிதத்தைக் காணவில்லையென்று
மண்ணுக்குள் தேடுவதா?
மனிதன் வாழச் சிந்திப்போம்
புனிதம் வாழச் சந்திப்போம்

வௌவாலுக்கு வாழ்க்கைப்பட்டால்
தலைகீழாய் தொங்கித்தானாகவேண்டும்
மந்திக்கு வாழ்க்கைப்பட்டால்
மரத்துக்கு மரம் தாவித்தானாக வேண்டும்

குயிலின் குரலில் கானம்
மயிலின் அசைவு நடனம்
மானிட வதனந்தன்னில் மனிதம்
ஆதியிலிருந்தே வளர்ந்தவையிவை

சிறகிழந்தால் பறவை வாழாது
தோகையிழந்தால் மயில் வாழாது
மனம் கற்பிழந்தால் மங்கை மனம் சிறக்காது
மனிதம் இழந்தும் மனிதன் வாழ்கிறானே

எப்படியிருந்த இயற்கை மாறியது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நிஜம்

வள்ளுவன் காட்டிய பொருளாதாரம்
வண்டில் மாட்டோடு போயிற்று
வெளிநாட்டு மோகத்தால்
உள்நாட்டுப் பொருளாதாரம் (...?)

அறன் ஈனும் இன்பமும் ஈனும்
திறனறிந்து தீதின்றி வந்தபொருள்
திசைமாறிப் போயிற்று
திருக்குறள் காட்டிய பொருளாதாரம்

இயற்கையை மீறி இன்பம் தேடி
இயல்பை மாற்றி மகிழ்வு தேடி
இயற்கையைப் பாழாக்கும்
இன்றைய உலகில்

வள்ளுவன் காட்டிய பொருளாதாரம்
வற்றிய குளத்தில் மீன் போன்றதாயிற்று
இன்றைய நிஜம் இதுதான்
நாளைய நாட்டின் பொருளாதாரம் (...?)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதிர்ந்த இறகுகளாக...

எங்கள் இதயக் கதவுகளை
மெல்லத் திறப்போம்
உதிர்ந்த இறகுகளாய்
உறவற்றுக் கிடக்கும்
உறவுகளுக்கு எங்கள்
உதவிக் கரங்களை நீட்டுவோம்

போரின் வலியால்
போராடிக் கிடக்கும்
வாழ்க்கைக் கோலத்திற்கு
வண்ணமிட்டுக் கொடுப்போம்
சின்னஞ்சிறார்களுக்கு
வண்ணச் சிறகுகளோடு
வாழ்க்கைப்பட்டம்
வாங்கிக் கொடுப்போம்

உதிர்ந்த இறகுகளோடு
உதிரம் வடிக்கும்
உறவுகளுக்காய் எங்கள்
இதயக் கதவுகளை
இனிமையோடு திறப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசைகள்

இல்லாத தொல்லைகள்
இதயத்தில் தொடர்ந்தாலும்
பொல்லாத ஆசைகள்
பொங்கி வழிகின்றன

செல்லாதகாசை காட்டியாவது
செல்வந்தனாகிவிட வேண்டும்
ஏழையின் நெஞ்சத்தை
ஏமாற்றியாவது... எப்படியாவது...

துயரக் குழிக்குள்
தளிரொன்று வளர்கிறது
தனிமைப் பயணத்தை
தகர்த்தெறிந்து விட்டு

வாழவேண்டுமெனும் ஆசையால்
எதிர்பார்ப்புக்கள் இன்னுமின்னும்
ஏறிக்கொண்டே செல்கிறது
ஆசைகள் முடிவதில்லையென்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர்

வேற்றுமொழி கலப்பால்
உருக்குலைந்த தமிழ்த்தாய்
உருகியழுத கண்ணீர்துளிகள்
வானில் நட்சத்திரமாய் ஒளிர
வானோன் சாபமிட்டுவிட்டான்
தமிழா...!
வந்து பார் வெளியே
எண்ணிப்பார் முடிந்தால்
உன் தமிழ்த்தாயின்
கண்ணீர்த்துளிகளை

## பெரியது

உலகில் பெரிய பொருளொன்றுளது
அலகில் சோதியனின் உருவல்லஅது
புலவர்கள் பாடும் புகழும்
அருளாளர் போற்றும் பண்பும்
அன்பிலார்க்கும் தன் மடியில்
அடைக்கலம் கொடுக்கும்
அன்னையின் உள்ளம்
அளவிலா அகிலம் அடங்கும்
இறைவனை விட பெரிதன்றோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல்

அன்பே...!
ஒற்றை ரோஜாவோடு
கண்ணில் நீர் சிந்த
நீ வருகிறாய் என்னைத்தேடி
நான் உறங்குகின்றேன்
கல்லறையில்...

உன் கன்னத்தில் வடிந்த
கண்ணீர்த்துளிகள் ஒவ்வொன்றும்
மண்ணை முத்தமிட்டதை
விண்ணிலிருந்து கண்டபோது
சிந்திக்க மறந்த மனங்கள்
சந்திக்கும் ஓர் இடம் கல்லறை
என்று யாரோ அன்று
சுவரில் எழுதிவைத்த
முத்தான வார்த்தைகள்
ஞாபகம் வந்தன எனக்கு
அன்று தான் உணர்ந்தேன்
காதல் என்பது
வெறும் கண்ணீரும்
கல்லறையும் தானென்று...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழை தாராயோ

சில்லறைச் சிரிப்புடன்
சிலிர்த்துக் கிடந்த வயல்களெல்லாம்
வான் பார்த்த பூமியாய்
வாடிக் கிடப்பது மட்டுமல்ல
உன் வரவைப் பார்த்துப் பார்த்து
வலித்துவிட்டது விவசாயிகளின்
விழிகள்...

வறண்டு கிடக்கும் வயல்களெல்லாம் புதுப்
பொலிவுகண்டு பூத்துக்குலுங்கிட
வாடிக்கிடக்கும் உயிர்களெல்லாம்
வளம் பெற்று உயிர்த்திட
வருவாயா மழைத்துளியே
வருண பகவானே அருள்வாய்
மண்ணுயிர்கள் வாழ்ந்திட மழை

கல்லிலும் ஈரமுண்டு என்பார்கள்
சில்லென்று பூமி செழித்திட
நல்ல மழை தருவாய் பகவானே
இறைவா எமக்காக இரக்கம் கொண்டு
கண்ணீர் சொரிவாயா?
பூமி செழிக்க...

பி.வேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரக்காற்று

நாட்டுப் பற்றோடு நலந்தரு சுதந்திரம்
காட்டு வாழ்க்கையை மாற்றி
வீட்டுக்குள்ளிருந்து குயில்களின்
கானம் கேட்க விரும்புகிறேன்

வானிலே மிளிரும் வெள்ளிப்பூக்களாய்
பாரினிலே மிளிர்ந்து நாம்
வேரற்ற மரம் போன்ற
வேற்றுமையை ஒழித்திடல் வேண்டும்

ஒன்றே குலம் ஒருவனே தேவன்
என்றே நாம் ஆற்றினை எதிர்த்து
ஒற்றுமையாய் நீந்தும் அயிரை மீன்களாய்
வாழ்ந்திடல் வேண்டும் இவ்வையகத்தில்

கதிர்கள் கமழ்ந்து விரியும் பூப்போல
காரிருள் அகற்றி வேற்றுமை களைந்து
ஏழாம் தசாப்தமதை எதிர்நோக்கும்
இலங்கைத்தாயின் சுதந்திரகாற்றை சுவாசிப்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணாடிப் பூக்கள்

கண்ணாடிப் பூக்களே - உலகின்
உயிர்நாடி நீங்களே...!
மண்ணாடி போவதை நிறுத்தி
விண்ணாடிப் பறவுங்கள்....

வெற்றிச் சிகரம் தொடுங்கள்
மாற்றம் வரும் உலகில்
நாற்றம் இல்லா நறுமலர்களே
ஏற்றம் காண விரையுங்கள்

புதுக்காவியம் படைத்திடுங்கள்
அது நிலைபெற உழைத்திடுங்கள்
கண்ணாடிப்பூக்கள் நீவீர்
உடைந்திடாமல் காத்தல் கடமை

## நின்று விட்டேன்

என் காதலை உன்னிடம் சொல்ல
என்னிடம் துணிவிருக்கிறது உயிரே
ஆனால்,...
என் காதலை நீ ஏற்காது விட்டால்
அத்துன்பத்தைத் தாங்க
துணிவில்லை என்னிடத்தில்....
அதனால் தான்....
பார்வையில் அம்புவிடும்
வேலையோடு மட்டும் நின்றுவிட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடு

பண் ஒன்று பாடு அது நம்
பண்பாடு பற்றி அமையட்டும்
கண்கள் கவனிக்கட்டும் நம்
பண்பாட்டின் நிலை பற்றி

சிந்தனைகள் பரவட்டும் அதுநம்
பந்தங்களின் பண்பாடாய் அமையட்டும்
சிந்தை நிறையட்டும் அது நம்
பண்பாட்டின் வளர்ச்சியால் அமையட்டும்

வளர்ச்சிகள் வளரட்டும் அதுநம்
வம்சத்தின் பண்பாடோடு சேரட்டும்
வன்மைகள் ஒழியட்டும் அதுநம்
பண்பாட்டின் வளர்ச்சியாகட்டும்

சமூகங்கள் நிமிரட்டும் அதுநம்
பண்பாட்டின் சன்மானம் ஆகட்டும்
நிம்மதி ஒளி வீசட்டும் அதுநம்
பண்பாட்டை நிலைக்கவைக்கட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மகள்

கலகலவென சிரித்துமகிழ்ந்து
சிலவேளை விழுந்து எழுந்து
சல சலவென சங்கீதம் பாடிய
நதிமகள் எங்கள் தமிழ் மகள்
கூனிக் குறுகி தலைகுனிந்தாள்
பாவி மனிதர்கள் சிலர் - எம்
பண்பாட்டின் நிலைபற்றி
அரசல்புரசலாய் பேசிய
அபத்த வார்த்தையைக் கேட்டு
தலைகுனிய வேண்டியது அவளல்ல
தமிழர்கள் ஒவ்வொருவரும் தான்.

## கொடியது

எத்தனை பேனாமுனைகள்
எத்தனை அம்சமாய்
இன்சொல் செப்பியே
கவின்கலைக் காவியம் படைந்தன
அத்தனையையும் வீணாய்
அலட்சியம் செய்ததால்
மேனாட்டு கலாசாரம் ஓங்கி
எம்பண்பாடழிவது கொடிதுகொடிது
இதைவிடக்கொடிது வேறுளதோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் - நீ

சிறகொடிநத பறவையாய்
சிறைகிடக்கிறேன் நான்
சிரித்துப் பேசி என்னை
சிரிக்கவைக்கப் பார்க்கிறாய் நீ

மனதின் ஆழம் வரை சென்று
அமைதியின் உச்சத்தைத் தேடுகிறேன் நான்
கனவின் வேகத்தைத் தூண்டி
துணிவின் துளியை துலக்குகிறாய் நீ

கல்லடிபட்ட மயிலாய்
கால்கள் இழந்து தவிக்கின்றேன் நான்
பல வர்ண சாயமிட்டு
பறக்கவைக்கப் பார்க்கிறாய் நீ

மொழியிழந்த கிளியாய்
நலிந்துகொண்டிருக்கிறேன் நான்
நம்பிக்கை ஒளிதந்து
நடுவானில் மிளிரவைக்கிறாய் நீ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாறாத அன்பு

கடவுளின் படைப்பான
காலங்கள் கூட மாறுதம்மா
காலம் முழுவதும் காப்பேன் என்ற
சத்தியம் கூட மாறுதம்மா

மனிதர்கள் கூட இப்போது
மரத்துக்கு மரம் தாவுகின்றனர்
காதலர்கள் கூட அடிக்கடி
மாறுகிறார்களம்மா

சத்திய வேலியாம் தாலிகூட
சம்பிரதாயம் மறக்கிறது
நிலவு கூட சில இரவுகளில்
வர மறந்து போகிறதம்மா

இலவு காத்த கிளிக்குக்கூட
சில வேளைகளில் வெற்றி
பல கற்கள் கூட இப்போது
கடவுளாய் மாறுதம்மா

ஆனால் உன் அன்பு மட்டும்
மாறியதில்லை அம்மா
மாறாத ஓர் அன்பு
மகத்தான உன் அன்பே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் குறும்புகள் எத்தனைமுறை
உன்னை வேதனைப்படுத்தியிருக்கும்
ஆனாலும் உந்தன் அன்பு என்னை
பொறுமையாய் பாராட்டும்

இறைவன் மாபெரும் கற்பனைக்காரன்
ஏனென்றால் தனக்குக் கிடைக்காத
உன்னதமான ஓர் உறவை
எனக்காக தந்துள்ளான் அல்லவா?

உன்னால் எனக்கும் இந்த
உலகத்க்கும் மட்டுமல்ல...
இறைவனுக்கு கூட பெருமைதான்
இந்த உலகிற்கு உன்னை தந்ததனால்...

## அரியது

கல்வி எனும் சாணைக்கல்லில்
தீட்டிய மதியென்னும் வாளைக் கொண்டு
மீட்டிடும் விதியை அறுக்க
சுட்டியே வழி சொன்ன
வள்ளுவன் போன்றதொருவன்
மண்தன்னில் பிறந்தலரிது
அவர் செப்பிய செந்தமிழ்
வார்த்தைகளுக்கு இணையாக
பிறிதொரு குறள் படைத்தலரிது

பி.வேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு சோடிப் பெற்றோரின் சோகக்கதை

பஞ்சம் கொண்டு வாடிய போதும்
பிஞ்சுக் குழந்தைகளாய் தவழ்ந்த
தம் மழலைகளை
இஞ்சினியர்கள் ஆக்கிவிட்டு
எஞ்சியிருந்த காலமதை
ஓய்வாய் கழிக்கலாமென
நெஞ்சம் எண்ணம் கொண்டபோது
நஞ்சம் மிக்க பிள்ளைகள்
கொஞ்சமும் தயங்காது
இரஞ்சி நின்றனர் பெற்றோரை
முதியோர் இல்லம் நாடுமாறே..!

மிஞ்சியிருக்கும் உயிரையும்
வஞ்சக வார்த்தைகளால்
அஞ்சாது கொன்று தின்னும்
நஞ்சகர்களையா பெற்றோமென
நெஞ்சமுடைந்தனர் அவர்கள்
கஞ்சமில்லா அன்பை அள்ளிக்கொடுத்த
வஞ்சமறியா அந்நெஞ்சங்கள்
முதியோர் இல்லத்தில்
வருந்தியே கூறிய கதையிது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லமை தாராயோ....?

தடைகளைத் தாண்டி
தனிமை தவிர்த்து
இனிமை காண்பதற்கு
வல்லமை தாராயோ....

பொங்கும் இன்பத்தை
சங்கத் தமிழெடுத்து
பாங்குடன் பகிர்ந்துகொள்ள
வல்லமை தாராயோ...

மெழுகுக்கு உயிர்கொடுக்கும்
தீக்குச்சியாய் வாழவே
மனதுக்கு உறுதி கொடுக்க
வல்லமை தாராயோ....

இன்பமே நிறைந்து
இன்னல்கள் மறந்து
செம்மையாய் வாழ்ந்திட
வல்லமை தாராயோ....

அன்னைக் கருவறையில்
ஐயிரண்டு மாதம்
இன்னொருமுறை வாழ்ந்திட
வல்லமை தாராயோ...



பி.வேதிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதுமையான வயதில்
புதுமையான நோய்கள்
எதுவும் அணுகாமலிருக்க
வல்லமை தாராயோ...

கருணைக் கடலாய்
இருண்மை இல்லாதவளாய்
அருமை குழந்தையாய் நானிருக்க
வல்லமை தாராயோ...

நிறைவில் தழும்பாத
நிறைகுடம் போல
கலைகள் பல கற்றிட
வல்லமை தாராயோ...

## வருவாயா...

மடிந்துபோன மாயக் கனவுகளோடும்
மறக்கத்துடிக்கும் வடுக்களோடும்
மறைந்துபோன மனச் சிரிப்பில்
மன்னவனே உன்முகம் மட்டும்
புன்னகையுடன் என் முன்னே
பூத்தது போல் உணர்ந்தேன்

உன் புதிரான புன்னகைகண்டு
என் இதயத்தில் பல அர்த்தங்கள் தேடி
தோற்றுப் போய் இருக்கின்றேன்
தேற்றவருவாயா நீ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்ந்து மொட்டு

உள்ளம் நினைக்குது உன்னை
உதடு மறைக்குது உண்மை
கள்ளம் இல்லை காதலில்
உள்ளம் முழுவதும் இன்பம்
துள்ள வைக்குது என்னை
எங்கும் உன்முகம் தெரியுது
பொங்கும் ஆவல் கானலாகுது
சங்கும் ஒலிக்குது காதில்
மங்கும் பார்வையிலும் தெரியுது
தங்கம் போன்ற உன்முகமே!
ஏங்குது என்மனம் உன்னைக்காண
தூங்குது இல்லை என் கண்கள்
வாங்குது உன் காதல் என் உயிரை
வியக்குது என்மனம் இதுதான்
காதலா என்றெண்ணி....
காதல் மொட்டு மெல்ல மலர்கிறது!

## புதியது

வேத ஓசையும்
வீணையின் இராகமும்
சோதிவானவர் தோத்திரபாடலும்
கீத பண்ணும் பொங்கிவழியும்
இலக்கியங்களைப் படைக்கும்
இலக்கிய வித்தகர்களின் கற்பனை
இப்புவிதன்னிற்குப் புதியவையன்றோ?



பி.வேதிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி கொடுப்பீரோ...

ஒவ்வொரு துளியாய் சேர்த்து
ஒவ்வொன்றாய் உருக்கொடுத்து
கருவிருக்க கருவறையும்
கொடுத்த தாய்

தான் பசிகிடந்து பிள்ளை
பசி நீக்கிய அன்னை
புசித்திடும் பாலை
ரசித்தே குடிக்க
தாலாட்டும் பாடியவள்

தத்தித் தழுவும் வயதுமுதல்
சித்தி பெற்றிட வாழ்த்துவரை
தொடர்ந்த அவள் உறவு
பட்டம் வாங்கும் போது மட்டும்
வாடகைக்குச் சென்றதென்ன?

பாமரத்தாய் தன் மகனை
பட்டதாரியாக்கினாள் அந்த
அறப்படித்த மேதைக்கு
அவள் என்ன வேலைக்காரியா?

இதயம் இல்லாத அவர்களையா
இதயத்தில் அவள் சுமந்தாள்...?
இரத்தத்தில் அன்பில்லாதவர்களுக்கா தன்
இரத்தத்தையே பாலாக்கி கொடுத்தாள்?



பி.வேதிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் வாழ்வை மெழுகுவர்த்தியாய்
உருக்கி ஒளி கொடுத்தவளின்
வாழ்க்கை இருட்டில் மாளுகிறது
அவளின் ஒளியில் வாழ்ந்தவர்கள்
அவளின் வாழ்க்கையில் தீபமாய்
ஒளிர முன் வருவார்களா?

## கவிதை

தனிமையின் ஓவியமாய்
துணையின் இலக்கணமாய்
இனிமையின் பரவசமாய்
கனிவான அவள் பார்வை
எதிர்பார்ப்பின் இமயத்தில்
எதிர் நீச்சலை ஆரம்பித்தேன்
எதிர்காலக்கனவுகளுடன்
சங்கமித்தாள் அவள்
விதி தன்னை வென்று
கனவு நனவாகிடவேண்டும்

## முதியோர் இல்லம்

நன்றியுள்ள ஜீவனே - உன்னை
ஊட்டி வளர்க்கும் அன்னைக்காய்
ஆட்டி வைப்பாய் வாலை - ஆனால்
மாந்தர்களோ அன்னைக்காய்
ஆக்கிவைத்தனர் முதியோர் இல்லங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னிப்பு

மலர்ந்திட்ட மலர்களும்
மண்ணில் மடிந்தே
மன்னிப்புக் கேட்குதோ...?
வளர்ந்திட்ட மரத்தில்
கனிந்திட்ட பழங்களும்
விருட்சத்தின் பாதத்தில்
வீழ்ந்தே கேட்குதோ...?

அற்ப பறவைகளும்
அகிலப் பறந்தே
அந்த இறைவனிடம்
மன்னிப்புக் கேட்கிறதோ...?

என்ன எப்படிக் கேட்டாலும்
இறைவன் மனிதனிடம்
மன்னிப்புக் கேட்கவேண்டும்
மன்னிப்பு எனும் மகத்தான
குணத்தை சிலமனிதர்களுக்கு
வழங்க மறந்ததற்கு...

பி.வேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இசைஞானி

இன்பத் தமிழ் சோலையிலே
இசை எனும் தேனருந்தி
சிரமங்கள் பல கடந்து
சிகரத்தைத் தொட்டுவிட்டு
செந்தமிழ் பாட்டுக்கு உயிர்தந்த
இசையின் ராஜா இளையராஜா!

தேனி மாவட்டமது
தேன்தமிழ் வளர்க்கத்
தேர்ந்தெடுத்த ரீங்காரமே
இவ்வையகம் தன்னில் நீர்
அவதரித்த நன்னாளில்
அன்னைத்தமிழ் அளவிலா
ஆனந்தம் கொண்டாளே
அவனியெங்கும் விழாக்கோலம்

உலகமே உம் இசைத்தாலாட்டில்
உறங்குவது மட்டுமல்ல
விழித்தெழுந்தும் இருக்கிறது
சிந்தனை சிதறியோருக்கு உம்இசை
சிறந்த வழிகாட்டிகளாயினவே

தரணி எங்கும் பொங்கும்
இசைத் தொண்டதனால்
இசைத்தமிழ் வளர்க்கும்
இசைவீரன் இளையராஜா
ஆண்டாண்டு வாழ்ந்திங்கே
ஆளவேண்டும் இசையால்
பல்லாயிரம் உள்ளங்களை
அருள் புரிவாய் இறைவா!

பி.வேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊனமுற்ற செல்வம்

இளமைப் பருவங்கள்
இம்சையுடன் கழிந்தன
இலாபம் பார்த்தே
நாட்கள் நகர்ந்தன
இல்லறம் இனிமையை
இழந்தே இழிந்தது
நல்லறம் இங்கே
நாணி தலைகுனிந்தது

உலகில் எத்தனை
சவால்கள் உண்டோ
அத்தனையையும் கடந்து
வாழ்வினில் முன்னேறி
அனைவரும் அண்ணார்ந்து
பார்க்கும்படி உயர்ந்து
திரும்பிப் பார்த்தேன்
வாழ்வே வெறுமை
ஊனுறக்கமின்றி தேடிய
பணம் மட்டும்
ஊனமுற்ற செல்வமாய்
என்னுடன் இருந்தது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதைத் தருவேன் உனக்கு

காற்றோடு கவிபாடும்
கன்னியிவள் கலங்கிவிட்டாள்
ஒரு நிமிடம்
கரும்பு கேட்டழுத குழந்தையின்
கண்ணீர் போக்க கலங்கிய
பீர்பால் போல

கொடை கொடுக்க விரும்பியவன்
கர்ணன் கதவை தட்டியது போல
பரிசில் கொடுக்க விரும்பிய நான்
இதயத்தில் உதித்த புன்னகையை
இதழ்களால் தர விரும்பினேன்

என் இதழ்களில் வரும் புன்னகையை
என் உறவே நீ பூவாக நினைத்து
கசக்கி விடுவாயோ என்றெண்ணி
வேண்டாமென என்மனம் போராடுகிறது
எனினும்
உன்மேல் நான் கொண்ட
அன்பால் சிறிதாய்
புன்னகை பூக்கும் உன்
மெல்லிய பூவிதழில்
சோலைவனப் பூக்களைக்
காணத்துடிப்பதால்
சிறிதாய் சிந்துகிறேன் புன்னகை
என் பரிசு சிறியது தான் ஆனாலும்
உள்ளிருந்து உண்மையாய் உதித்தது

பி.வேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளி எழுச்சி

எழுந்திடுவாய் பெண்ணே - உனக்கான
திருப்பள்ளி எழுச்சியிது
திரும்பிப்பார் நீ வந்த பாதையை
எங்கும் முள்ளே நிறைந்திருக்கும்

விரைந்திடுவாய் பெண்ணே - உனக்கான
விடுதலைப் பாதை நோக்கி
விழித்துப்பார் உன்னைச்சுற்றி
விழிவலைகள் விரிக்கப்பட்டிருக்கும்

முயன்றிடுவாய் பெண்ணே - உனக்கான
உரிமைகளைப் பெற்றிட
உரிமைகளைக் கேட்டுப்பார் உன்னைச்சுற்றி
உயர் மதில்கள் அமைக்கப்பட்டிருக்கும்

மீண்டெழுப்பார் பெண்ணே - உனக்கான
கட்டுப்பாடுகளிலிருந்து
கதறியழுது பார் உனக்கான
கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கும்

புறப்பட்டு வா பெண்ணே - உனக்கான
புனிதமாம் மகளிர் தினமதனை
நாணமுள்ள பெண்களுக்காய்
ஒவ்வொரு நாளும் கொண்டாடுவோம்

விழித்தெழுவாய் பெண்ணே - உனக்கான
திருப்பள்ளி எழுச்சியிது
உன் உரிமைப் போராட்டத்திற்கான
மகுட வாசகங்கள் இவை!

பி.வேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமையின் வலிமை

இரண்டாம் உலகப்போரில்
இராட்சதனாய் வந்த வறுமை
இரட்சிப்பாரில்லா மக்களை
இறக்கி வைத்தது வறுமை

ஓடியோடி ஓய்வில்லாது
உழைக்க வைப்பது வறுமை
கால்வயிறு பசியடக்க
கால்வாருது வறுமை

வெறுமையான வாழ்வைக் கூட
கருமையாக்குது வறுமை
வறுமையின்றி இவ்வுலகில்
வெறுமை யாதொன்றுளதோ?

குடும்ப வாழ்வுக்கு கூட
வம்பாய் வந்தமையும் வறுமை
நம்பிக்கைக்கு துரோகம்
செய்யவைக்கும் வறுமை

பாரதியைத் தாக்கிய வறுமை
பரிதியைக் கூடச் சுட்டெரிக்கும்
காலத்தைக் கூட கல்லாக்கும்
ஞாலத்தை கூட பொய்யாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேயைக்கூட கொல்லவைக்கும்
தாயைக்கூட தவறவைக்கும்
மாயை வழி நடக்கவைக்கும்
தீயைக் கூட தின்னவைக்கும்

கர்ணனைக் கூட கலங்கவைக்கும்
மர்ம வித்தைகள் மறக்க வைக்கும்
சர்வ வல்லமை போக்க வைக்கும்
துர்நடத்தை தந்து தாழ்த்தும்

புன்னகையில் விஷம் வைக்கும்
மன்னனையும் மடியேந்த வைக்கும்
தன்னம்பிக்கையை தளர வைக்கும்
விண்ணையும் அழிக்கும் வறுமை

## ஊற்றெடுக்கும் கவிதைகள்

உறங்கிகிடக்கும் என்
உறைந்த உணர்வுகள்
ஊர் உறங்கிய பின்
ஊற்றெடுக்கும் கவிதைகளுக்கு
உருவம் கொடுப்பது மட்டுமன்றி
வாடிக்கிடக்கும் என்
வசந்தகாலப் பூக்கள்
துளிர்விட்டுச் சிரிப்பதற்கும் இந்த
இன்ப இரவுப் பொழுதுகளே
உரமாய் அமைகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருக்கிறேன்

தினம் உன்னை எதிர்பார்த்து
மனம் ஏங்குகிறது உயிரே.
தனம் என்ன தானியம் என்ன
குணம் ஒன்றே உயர்வு

சனம் என்முன்னால் கூடி நின்று
சினம் ஏற்றுகிறது எனக்கு
மனம் எல்லாம் உன் நினைவே
பிணம் மட்டும் இங்கே

பணம் வைத்தார்கள் நெற்றியில்
கனம் ஒன்றும் இல்லை எனக்கு
உளம் மட்டும் மேலிருந்து
இவர்கள் செயல்பார்த்து சிரிக்கிறது

யார் தருவார் உணவென
பார் பார்த்து நின்றேன் அன்று
பட்டினியில் வாடும் போது
பட்டினத்தார் யாரும் வரவில்லை

என் சடலத்திற்கு அருகிருந்து
ஒப்பாரி வைக்கும் கூட்டம்
இப்போது பறந்து விடும் உன்னையே
எப்போதும் நான் எதிர்பார்த்திருப்பேன்


பி.வேதிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று நீ சோறு போட்டாய்
இன்று ஏன் எனை பார்க்க வரவில்லை
என்றும் நான் உன் வரவுக்காய்
காத்திருப்பேன் கல்லறையில்..

நீ வந்து கண்ணீர்த்துளியொன்று
என் மடியில் விட்டால் போதும்
என் ஆத்மா சாந்தியடையும்
உன் வரவுக்காய் காத்திருக்கிறேன்

## இராத்திரிகள்

ஊர் உறங்கிய பின்னும்
உன் வருகைக்காய்
காத்திருக்கும் எனக்கு
துணையாய் இருப்பது
இந்த இராத்திரிகளே

இருண்டுபோன என் வாழ்வை
இரைமீட்டிப் பார்ப்பதும்
இனிய வசந்தகால நினைவுகளுக்காய்
ஏங்கித்தவிக்கும் தவிப்பும்
இந்த இராத்திரிகள் மட்டுமே
அறிந்த இரகசியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர்களின் ஏக்கம்

உன் தலையில்
தம்மை சூடிக்கொள்வாயாயென
ஏங்குகின்றன மலர்கள்

உன் தலையில் சூடும்
மலர்களில் தேன் குடிக்க வண்டுகள்
போட்டி போடுகின்றன

உன் பின்னிய சடையில்
தவழவென்றே தவம் கிடக்கின்றன
மல்லிகை மாலைகள்

நீ நடந்து செல்லும் போது
பாதங்களுக்கு பஞ்சாகவென்றே
பூத்திருக்கின்றன பூக்கள்

ஆனால் நீ காமப்பிசாசுகளின்
கையில் அகப்பட்டு இறுதிக்கிரியையில்
கண்ணீர் சொரிய வைத்தாய் அவைகளை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யார் வாங்குவார்?

இதையார் வாங்குவாரென
கல்யாண சந்தையில்
கசக்கியெறியப்பட்ட மலர்நான்

இதையார் வாங்குவாரென
தமிழ் அகராதியில்
ஒதுக்கிவைக்கப்பட்ட ஃ நான்

இதை யார் வாங்குவாரென
ஆடைத் தொழிற்சாலையில்
அடக்கி வைப்பட்ட ஆடைநான்

இதை யார் வாங்குவாரென
கடையின் பின்புறத்தில்
கழித்துப்போடப்பட்ட சைக்கிள் நான்

என்னை யார் வாங்குவார்
என்ற கேள்விக்குறியோடு
இன்றும் முதிர் கன்னியாய் காத்துக்கொண்டிருக்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்க

எம் எதிர்காலம் எண்ணி
தம் துயில் துறக்கும் ஆசான்கள்
வெற்றி நிறைந்த வாழ்வுக்காய்
எமை வழியனுப்பும் ஆசான்கள்

கனிவுடனே கண்ணியமாய்
கவனிக்கும் ஆசான்கள்
சிந்தனைச் சிறகுகளை
விரியவைக்கும் ஆசான்கள்

தமிழென்ற அமுதை
தடங்கலின்றித் தரும் ஆசான்கள்
பெயரளவில் ஆசான்கள்
பேச்செடுத்தால் அன்னையே

ஆயிரம் வினாக்களுக்கு
அம்சமாய் விடைதரும் ஆசான்கள்
அன்பால் எமை வென்ற
ஆசான்கள் வாழ்க வாழ்கவே

## சாதியை விரட்டுவோம்

சாதி இரண்டொழிய வேறில்லை
இறைவனின் படைப்பினிலே
இயற்கைக்கு மாறாய் இயற்றிய
சாதியெனும் நோயை விரட்டிடுவோம்

பி.வேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நட்பு

கூடினால் குடிக்க வேண்டும்
வாடினால் விலக வேண்டும்
மூடினால் எழும்ப வேண்டும்
தேடினால் ஓட வேண்டும்
என்பது தான் நட்பென்றால்

கூடியிருந்து கும்மாளமடித்து
பாடியாடி இன்பம் வளர்த்து
நாடிச் செல்வோர்கெல்லாம்
நல்வழி காட்டுவதற்கு
என்ன பெயர் வழக்கில் .....?

கட்டுக்கட்டாய் காசுவைத்து
பட்டு வேட்டி கட்டுபவனே சினேகிதன்
பழைய சாரம் கட்டுபவன் எவனோ
என்பது தான் நட்பென்றால்...

பள்ளி நன்பனுக்கு வறுமையின்
துன்பமறிந்து செல்வ மளித்த
கண்ணன் குசேலன் கதையின்
கருத்துக்கு என்ன பெயர்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொலைபேசியில் வாழ்த்துக்கூறி
தொண்ணூறு நிமிடம் கதைப்பதும்
தோல்விகளால் விழும்போது இது
தொல்லையெனக்கூறி வேறுவழி
தொடுப்பதும் தான் நட்பென்றால்

தொலைதூரம் தொடர்ந்தே சென்று
தொல்லை மறந்து சொந்தம் கொண்டாடி
நலம் விசாரித்து மகிழ்ந்துண்டு
தோல்விகளைக் கண்டு துவளாதே என்று
உற்சாகமூட்டும் உறவுக்கு என்னபெயர்?

நடந்த நட்புச் சுவடுகளை ஒருநிமிடம்
திரும்பிப் பார்க்கின்றபோது
இதயம் தேனாய் இனிக்கிறது
நடக்கின்ற பாதையை பார்க்கின்ற போது
இதயம் ஏனோ கனக்கிறது

எங்கே போகிறோம் நாம்...?
அன்பறியா பண்பாட்டுச் சமாதிகள் மேல்
அழுக்கால் பதித்து நண்பர்களாய் கைகோர்த்து
எங்கே போகிறோம் நாம்
எதைச் சாதிக்க போகிறோம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீனமயமாக்கல்

மாடு பூட்டி உழுத வயலில்
யானை இயந்திரங்கள்
கோலமிட்டு வாழ்ந்த முற்றத்தில்
ஓலச்சத்தங்கள் ஒலிக்கின்றன

வசந்தங்கள் குடியிருந்த நமது வீட்டில்
வடுக்கள் கூடுகட்டி கோபுரமிட்டன
குடிசை வீடு மேல்மாடி யானதனால்
இத்தனை துன்பங்கள் நேர்ந்தது

வீட்டுக்கு வீடு ரீவி இருக்கு
சமுதாயம் சீர் கெட்டுப்போகிறது
நவீனமயமாக்கலினால் நாகரிகம் வளர்ந்து
பழைய பண்பாடு பாதை மாறிபோகிறது

இயற்கையை மீறி இன்பம் தேடி
இயல்பை மாற்றி மகிழ்வு தேடி
இயற்கையை பாழாக்கும் இந்த நிலைக்கு
இன்றைய பெயர் நவீனமயமாக்கல்!

பி.வேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "கலையும் இலக்கியமும்

தேறாத மனமுண்டோ தேன்கலையால்
மாறாத குணமுண்டோ இலக்கியத்தால்
சாறாகப் பிளிந்துடலை உழைத்தாலும்
நேராத இன்பமடா இலக்கியங்கள்

சேறுமிதித்து இரவுபகல் உழைத்து
சோறு போடும் கூட்டத்தின் பாமாலை
தேறு என்றே வழிகாட்டும் எங்கள்
தேன்மொழி இலக்கியக் கலைகள்

ஊறொன்று நிகழுமோ கலையால்
ஈறொன்று உண்டோ கலைக்கு
மாறுதல் உண்டெனில் நிச்சயம் அது
மாறாப்புகழ் பாடும் காவியங்கள் மூலமே

ஆதிமுதல் தோன்றிய அமுதங்கள்
நீதிமொழி பேசின அழகழகாய்
சாதிமொழி வேற்றுமை அகற்றின
நீதி வழி நாட்டை நடத்தின

நாதியற்றோர்க்கு நல்வழி காட்டின
பாதி மனிதனையும் முழுமையாக்கின
கடைந்து தந்தன விழுமிய கருத்துக்களை
ஊழியற்ற இலக்கியங்கள் அரியதேனமுதம்

பி.வேதிகா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கபூர்வமான மனிதர்களை நன்றாய்
ஆக்கித் தருபவை இலக்கியங்கள்
பார் போற்ற வழிகாட்டும் நல்ல
நேர்வழி இலக்கியப் பாதைகளே

எத்தனை பேனாமுனைகள்
எடுத்திருக்கின்றன மறு அவதாரம்
தாளில் தவழும் சின்னக்குழந்தைகளாய்
தவறாமல் மகிழவைக்கின்றன எம்மை

சேரும் இடம்தன்னை நன்றாய்
தேரும் கலையே காவியங்கள்
பேரும் புகழும் தருமே கற்றவர்க்கு
உலகம் போற்றும் கலை இலக்கியங்கள்

## காரணம்

சிறிதாய் புன்னகை பூக்கும்
உன் மெல்லிய பூவிதழ்
பாலைவனமாய் வறண்டு
சோலை இழந்து போவதற்கும்
காதல் கவிதை எழுதிகளித்த
உன் கைவிரல்கள் இன்று
கண்ணீர் துடைப்பதற்கும்
காரணம் நான் தானோ...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணே!

வல்ல இறைவனின் செல்லப்பிள்ளையே
வைகறையில் எழுந்திடுவாய் பெண்ணே
வல்லமை நிறைந்த உன் செயலால்
புல்லையும் கற்பகத்தருவாய் மாற்றிடுவாய்

அம்மா என்னும் பொக்கிஷமே
சும்மா இருந்திடல் நன்றோ பெண்ணே
அனுதினமும் அன்பு மழை பொழிந்தே
அகிலத்தை வென்றிடுவாய் பெண்ணே

கல்லான கணவனையும் கனிமொழியால்
நல்லோனாய் மாற்றிடுவாய் பெண்ணே
அன்போடு அயலவரை அண்டினால்
ஆண்டவனின் அருள் பெற்றுவாய் பெண்ணே

பண்போடு வாழ்ந்திட எம் பண்பாடுதனை
மாண்போடு காத்திடுவாய் தமிழ் பெண்ணே
வீண் பெருமை பேசிடும் உன் நாவை
பெண்ணியத்தின் விடுதலைக்காய் உபயோகி
அவனிதனில் நிலைத்திடும் உன் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சை நெருடும் நினைவுகள்

என் நெஞ்சத்தில் நிறைந்துள்ள
எல்லா நினைவுகளையும் பின்தள்ளி
முளைக்கின்றன சில வடுக்கள்
சளைக்காத அவற்றிற்கு வழிவிட்டு
என் நினைவுகளின் வாயில்கள்
என்னையறியாமலே திறந்துகொள்கின்றன

நிலாவினைப் பார்த்து உணவுண்ட
நீல வான நிலாப் பொழுதின் நினைவுகளால்
அலைபாயும் என் நினைவுகளை
அணைத்தெடுக்க முயல்கிறேன்
அவையோ என்னைத் தோற்கடித்து
முன்னேறிச் செல்கின்றன

மரம் தாவும் குரங்கு போல என்
மனமும் வசந்தங்களையும் வடுக்களையும்
மாறிமாறி பதிவு செய்து கொண்டிருக்கிறது
என் உணர்வுகளை மழுங்கடிக்கும்
சில ஊனமுற்ற நினைவுகள்
சிந்தனைகளைச் சிதறடிக்கின்றது

மாலைப் பொழுதுகளில் நண்பர்களோடு
ஓடிவிளையாடிய நினைவுகளை
மீட்டிப்பார்க்க முடியாதவாறு
போட்டிப்பரீட்சையில் தோல்வியுற்ற
நினைவுகள் என்னை ஆட்கொள்கிறது
என் கட்டுப்பாடுகளையும் கடந்து...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னை மடியில் தவழ்ந்த என்
சின்னப் பருவம் மறக்குமளவுக்கு
மண் விடுதலை போராட்டங்களின்
வீண் நினைவுகள் சங்கமிக்கின்றன
மடியில் தவழ்ந்த ஞாபகங்கள் மறந்து
அடிபட்ட நினைவுகளே என்னுள்...

பால் நிலவில் பாட்டி சொன்னகதை
கால் வாசி கூட நினைவில்லை
ஏலவிற்பனைக்கு என் வீடு
கால் விலைக்குப் போனதுமட்டும்
நெஞ்சம் முழுக்க நிறைந்து
வடுக்களாய் வந்து குவிகின்றன

இப்போதெல்லாம் எனக்கு என்
சொந்தங்களோடு சிரித்து மகிழ்ந்து
சொக்கட்டான் விளையாடியது ஞாபகமில்லை
சொத்துச் சண்டையில் சித்தப்பா
கத்தியவைகள் தான் காதுகளில்
ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக்கிறது

என் சொந்த மண்ணில்
உரிமையோடு சுதந்திரமாய்
வீடுகட்டி விளையாடிய ஞாபகங்கள்
ஏட்டில் கூட பதியவில்லை நான் ஆனால்
எட்டுக்கம்பி வேலிக்குள் ஒடுக்கமாய் இருந்த
ஞாபகங்கள் மட்டும் என்னுள்...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்தில் எத்தனை எத்தனை
விதமான மனிதர்களைப் பார்த்தேன் - ஆனால்
கறுப்பாடையணிந்து கரியிருட்டில் வந்து
கத்தியைக் காட்டி மிரட்டிய முகம் மட்டும்
மறக்கமுடியாத உருவமாய் என்னுள்
மாட்டிக் வைக்கப்பட்டிருக்கிறது

உணர்வுகளும் செயல்களும்
ஊனமுற்ற மனிதர் மத்தியில்
வேற்றுமையில் ஒற்றுமை கண்டு
வாழ முயற்சித்து தத்தளிக்கிறேன்
என் நினைவுகளும் என்னை
நெருடிச் செல்கின்றன

வடுக்கள் மட்டுமே
நிலைத்துவிட்ட நெஞ்சங்களில்
நிலைபேறான ஆசைகள் நிற்பதில்லை
நிம்மதியில்லா வாழ்க்கையின்
மகுடவாசகங்களாய் ஒலிப்பவை
நினைவுகளின் நிகழ்கள் மட்டுமே

நெஞ்சை நெருடும் நினைவுகள்
பஞ்சைப்போல் பறந்து போகாதா?
இவைகள் நெஞ்சை விட்டு மட்டுமல்ல
காலத்தாலும் அழியாதவை - இது
மனிதகுலத்தின் வரமா? சாபமா?
காலம் தான் பதில் தர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெறுமை

வெறுமையான உள்ளத்தில் சொற்களுக்கு கூட
வறுமை ஏற்பட்டு விட்டது
மறுமை இன்பம் நோக்கிய பாதையில் சென்றும்
வெறுமை மட்டுமே மிஞ்சியது

அருமை மிக்க நண்பர்களோடு நான்
பெருமை பேசிய நாட்கள் எங்கே
கருமை சூழ்ந்த வாழ்வுப்பூக்களில் எங்கே
நறுமையைக் கண்டு பிடிப்பது?

ஆசையாசையாய் நட்டுவைத்து தினமும்
பாசம் காட்டிய பூங்கொடி எங்கே?
காசுக்காக விற்கப்பட்ட அந்த பாசச்செடியை
தூசி தட்டிப்பார்க்க வேண்டும் புத்தகத்தில்

வசந்தங்கள் குடியிருந்த என்வீடு
வெறுமையின் இருப்பிடமானதே
சொந்தங்கள் சூழ்ந்திருந்த முற்றம்
வெறுமையில் வாடுதே!

சூரிய உதயத்தை எதிர்பார்த்த எனக்கு
கரிய இருட்டே கிடைத்தது
பாரிய சாதனை படைக்க முயன்றேன்
பெரிய சோதனைகள் சூழ்ந்தது

வெறுமை மட்டுமே உள்ளதென்றேன்
வறுமையையும் தந்தான் இறைவன்
இறைவனுக்கு கூட தெரியாத என் தேவைகளை
நிறைவு செய்வார் யாருளர்?


பி.வேதிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் கட்டுப்பாடுகளை கடந்து முளைக்கின்றன
எண்ணச் செடிகள்
சிதைந்து போன கனவுகளின் மத்தியில்
புதைந்த நினைவுகளை எப்படி மீட்பது?

ஊட்டி வளர்த்த உறவுகளையும் இழந்ததால்
மாட்டி வைத்திருக்கின்றேன் புகைப்படம்
அதையும் என்னிடமிருந்து பறிப்பதற்கு
திட்டம் போடுகிறதா இந்த வறுமை

எப்படி என் வாழ்வு வெறுமையானது
இப்படி கேள்விகள் உங்களுக்குள் ஏழாது
ஏனெனில் நீங்களும் என்னைப் போல
ஏதிலிகளாக்கப்பட்டவர்கள் தானே

வறுமையைத் தவிர வாழ்வில்
ஏனைய எல்லாம் வெறுமை
வறுமை ஏழையின் தோழன் அதுதான்
வெறுமையிலும் கூட துணையிருக்கிறது வறுமை

வெறுமை ஒன்றே இருக்கவேண்டுமென
மரணத்தைக் கூட தரமறுக்கிறான் காலன்
புராணம் பாடி எனைமயக்க காத்திருக்கிறார்கள்
புராணத்தின் இடுகுறிப்பெயர் காதல்!

மனிதனுக்கு மட்டுமேன் இத்தனை துன்பம்
மனிதன்மேல் இறைவனுக்கென்ன கோபம்
மனிதனுக்காக நல்லதை மட்டும் படைத்தால்
தன்னை மறந்திடுவான் என நினைத்தானோ இறைவன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுயுகம் படைப்போம்

புன்மை நெறி தழைத்தோங்கி
இன்பம் தொலைந்துவிட்ட
இன்மை யுகம் உடைத்து
புதுமை யுகம் படைப்போம்

மனிதம் மண்ணுக்குள் புதைந்து
வன்மை உரமாகிப் போன
சிறுமை யுகம் வேண்டாமென
நல்ல யுகம் நாம் படைப்போம்

இறைவனை கல்லில் சிறைவைத்து
மறைகளை மறந்து விட்ட
சிறை மிகுந்த யுகம் வேண்டாம்
நிறைமகிழ் உலகம் படைப்போம்

தீதொழுக்கமே எங்கும் பரந்து
பூவில் கூட சாதி மணம் பரப்பிய
ஊமையுகமிதனை உடைத்து
தீமையற்ற யுகம் படைப்போம்

காமப்பிசாசுகள் மனதில் குடிகொண்டு
சாமப்பேய்களாய் எங்கும் அலையும்
சாப யுகம் எமக்கு வேண்டாம்
தீப யுகம் படைப்போம் நாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைகளை ஏமாற்றும் பாவங்கள்
பல்கிப் பெருகிய பாலையுகத்தை
பாலை வனமாக்கிடுவோம் நாம்
புதுயுகம் படைத்திடுவோம்

ஒட்டியிருந்து இரத்தம் குடிக்கும்
ஒட்டுண்ணிகளை வெட்டியெறிவோம்
கட்டுப்பாடுடைய சமுதாயத்துடன்
பட்டுப்போலொரு யுகம் படைப்போம்

அன்பும் அனுதாபமும் நிலைகுலைந்து
வன்பும் வன்முறையும் நிலைபெற்ற
துன்ப யுகம் இனியும் வேண்டாம்
இன்ப யுகம் படைப்போம் நாம்

## பாலாபிசேகம்

செல்வம் தரவேண்டி
பாலாபிசேகம் செய்கிறார்கள்
பாலாம்பிகைக்கு....
கண்களில் நீர்வடிய
கையில் குழந்தையுடன்
காத்திருக்கிறாள் ஆலய வாசலில்
அழகான மகாலட்சுமி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர்களுக்கு நன்றிகள்

பழைய மாணவர் சங்கம், வவு/கனகராயன்குளம் ம.வி
வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
முத்தமிழ் மன்றம், ஒட்டுசுட்டான்

குரும்பையூர் ஐங்கரன்,
ச.நித்தியானந்தம் (அதிபர்),
க.சுப்பிரமணியம்,
சைவப்புலவர் திலகானந்தம்,
அறிவிப்பாளர் ரீ.எஸ்.முகுந்தன்,
வே.முல்லைத்தீபன்,
சு.தவபாலன்
காவியப்பிரதீபா யோ.புரட்சி,
திரு.இராசநாயகம் - சுவிஸ்
விஜய் அச்சுப் பதிப்பகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூலாசிரியர் பற்றி...

சிறு வயதிலேயே தமிழ் இலக்கிய உலகிற்குள் தடம்பதிக்கும் பிரபாகரன் நிலானி மணஇணையரின் புதல்வி செல்வி.பி.வேதிகா பள்ளி மாணவியாயிருந்து "கண்ணாடிப்பூக்கள் எனும் கவிதைத் தொகுப்பினை வெளியிடும் முயற்சியானது அனைவரும் பாராட்டத்தக்கதோடு கனகராயன்குளம் பிரதேசத்திற்கும், பாடசாலைக்கும், மாணவ சமுதாயத்திற்கும், கவி உலகிற்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும்.



துள்ளித்திரியும் வயதிலேயே கவிவரிகளை அள்ளிவீசும் ஆற்றல் கொண்ட இவர் படிக்கும் போதே தரம் நிறைந்த கவிகள் புனையத் தொடங்கியவர் இவர் கல்வியில், வாழ்வில் உயர்ச்சி அடைவதோடு தமிழ் மொழியை வளர்த்திடும் பணிக்காய் இன்னும் இதேபோல் எண்ணில்லா நூல்களை ஈன்றிட இறைவனின் ஆசியை இறைஞ்சி வாழ்த்துகிறேன்.

**கவிஞர் க.பாலசுப்பிரமணியம்**
வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணம்.

978-955-42298-0-8

Vijay Printing Centre - Vavuniya -

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org